



# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

## பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

### மானியக் கோரிக்கை எண். 9

அறிவிப்புகள்

2021–2022

# பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத்துறை

# பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகப்பிற்படுத்தப்பட்டோர் நலன்

## மானியக் கோரிக்கை எண். 9

**அறிவிப்புகள்**
**2021–2022**

**எஸ்.எஸ். சிவசங்கர்**

பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்

## 1. 259 கல்லூரி விடுதிகளில் 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் " செம்மொழி நூலகம் " ஏற்படுத்தப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் கல்வி அறிவு மற்றும் பொது அறிவினை வளர்க்கவும், அவர்கள் தங்கள் வாழ்க்கையில் சிறப்பான முறையில் முன்னேற்றம் அடைவதை நோக்கமாகக் கொண்டும் 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளில், தலா ஒரு நூலகம் ( " செம்மொழி நூலகம்" என்ற பெயரில்) 2 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்துப்படும்.

## 2. 259 கல்லூரி விடுதிகளுக்கு 1 கோடியே 44 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் வழங்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியரின் உடல் மற்றும் மன ஆரோக்கியத்தை மேம்படுத்தும் பொருட்டு, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு உடற்பயிற்சி கருவிகள் மற்றும் விளையாட்டு கருவிகள் 1 கோடியே 44 இலட்சத்து 40 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



## 3. 40 விடுதிகளுக்கு 10 இலட்சம் ரூபாய் செலவில் போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் வழங்கப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் வேலை வாய்ப்புக்கான போட்டி தேர்வுகளில் பங்கேற்பதை ஊக்கப்படுத்தும் பொருட்டு, விடுபட்டுள்ள 40 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதிகளுக்கு போட்டி தேர்வுகளுக்கான புத்தகங்கள் 10 இலட்சம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**4. 259 கல்லூரி விடுதிகளில் மாணவ, மாணவியருக்கு தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி அளிக்கப்படும்.**

கல்லூரி விடுதிகளில் தங்கி பயின்று வரும் மாணவ, மாணவியர் பல்வேறு நிறுவனங்களால் நடத்தப்படும் தேர்வுகளில் கலந்து கொண்டு வெற்றி பெறுவதற்கு ஏதுவாக, 259 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு தனித்திறன் மற்றும் ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் வழங்கப்படும்.



**5. இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களுக்கு IFHRMS திட்டத்திற்காக 85 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் கணினிகள் மற்றும் உபகரணங்கள் வழங்கப்படும்.**

இயக்ககங்கள் மற்றும் மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்தினை உரிய முறையில் துரிதமாக செயல்படுத்த, பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் / சீர்மரபினர் இயக்ககங்கள் மற்றும் 38 மாவட்ட அலுவலகங்களில் IFHRMS திட்டத்திற்காக, கணினிகள் மற்றும் அச்சுப் பொறிகள் மற்றும் இயக்ககங்களுக்கு கணினிகள் மற்றும் உபகரணங்கள் 85 இலட்சத்து 20 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**6. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கான வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

கல்வி உதவித் தொகை திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்.



**7. கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் பயன்பெற முதல் பட்டதாரி என்பதற்கு பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி என்று நிபந்தனையில் மாற்றம் செய்யப்படும்.**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் கல்லூரிகளில் அதிக அளவில் சேர்ந்து கல்வி பயில வேண்டும் என்பதற்காக இம்மாணவர்களுக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் பயன்பெற முதல் பட்டதாரி (First Graduate) என்ற நிபந்தனைக்குப் பதிலாக முதல் தலைமுறை பட்டதாரி (First Generation Graduate) என்ற அடிப்படையில் குடும்பத்தில் ஒன்றுக்கு மேற்பட்டவர்கள் உயர்கல்வி பயின்றாலும், சலுகைகள் வழங்க வாய்ப்பு அளிக்கும் வகையில் நிபந்தனை மாற்றம் செய்யப்படும்.

**8. கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் வழங்கப்படும் உண்டி மற்றும் உறையுள் கட்டணங்கள் 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் உயர்த்தி வழங்கப்படும்.**

விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு உண்டி மற்றும் உறையுள் கட்டணத்தை எவ்வித பாகுபாடின்றி வழங்கும் பொருட்டு, கல்வி உதவித் தொகை திட்டங்களின் கீழ் கல்வி நிலையங்களுடன் இணைந்துள்ள விடுதிகளில் தங்கிப் பயிலும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கு மாதாந்திர உண்டி மற்றும் உறையுள் கட்டணமாக தற்போது பட்டப்படிப்பு பயிலும் மாணவ, மாணவியருக்கு 175 ரூபாய், தொழிற்கல்வி பயிலும் மாணவ, மாணவியருக்கு 350 ரூபாய், ஐடிஐ/பட்டயப்படிப்பு மற்றும் முதுகலை மாணவ, மாணவியருக்கு 235 ரூபாய் என்று வழங்கப்படுவதை அனைவருக்கும் 400 ரூபாயாக உயர்த்தி 9 கோடி ரூபாய் கூடுதல் செலவில் வழங்கப்படும்.



**9. விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு 83 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் புத்தாக்க பயிற்சி வழங்கப்படும்.**

விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகள் தங்கள் விடுதியை சிறந்த முறையில் பராமரிப்பு செய்திடவும், விடுதியை திறம்பட நடத்திடவும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் பணிபுரியும் காப்பாளர் / காப்பாளினிகளுக்கு புத்தாக்க பயிற்சி 83 இலட்சத்து 92 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

## 10. மாவட்ட அளவில் சிறந்த விடுதிகளுக்கு 7 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.

மாநிலம் முழுவதும் செயல்படும் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் விடுதிகள் மற்றும் கள்ளர் சீரமைப்பு விடுதிகள் சிறப்பாக செயல்படுவதை ஊக்கப்படுத்தும் வகையில், ஆண்டுதோறும் மாவட்ட அளவில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகள்/கள்ளர் சீரமைப்பு விடுதிகளில் சிறந்த 3 விடுதிகளைத் தேர்வு செய்து 7 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் பரிசுகள் வழங்கப்படும்.



## 11. 20 கல்லூரி மாணவியர் விடுதிகளுக்கு 23 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகள் பொருத்தப்படும்.

கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவியர், விடுதி காப்பாளர்கள் மற்றும் விடுதி பணியாளர்கள் ஆகியோரின் வருகையை உறுதி செய்யும் பொருட்டு, முதற்கட்டமாக 20 பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல கல்லூரி மாணவியர் விடுதிகளில், மாணவியரின் வருகையை உறுதி செய்ய முக அங்கீகார அடிப்படையில் பயோ-மெட்ரிக் கருவிகள் 23 இலட்சத்து 60 ஆயிரம் ரூபாய் செலவில் பொருத்தப்படும்.

**12. பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கைக்கான ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவ, மாணவியர் சேர்ந்து தங்கிப் பயிலும் வகையில் இவ்விடுதிகளில் மாணவ, மாணவியரின் சேர்க்கைக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 1 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.



**13. விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.**

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் சிறப்பு பராமரிப்பு மற்றும் பழுதுபார்ப்பு பணிகள் மேற்கொள்ள 13 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்படும்.

## 14. 7 மாணவியர் விடுதிகளுக்கு 91 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவியரின் பாதுகாப்பை உறுதி செய்யும் பொருட்டு 7 பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மாணவியர் விடுதிகளுக்கு 91 இலட்சத்து 68 ஆயிரம் ரூபாய் செலவில் சுற்றுச்சுவர் கட்டப்படும்.



## 15. விடுதி மாணவ, மாணவியருக்கான பல்வகை செலவினத் தொகை 4 கோடியே 80 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியருக்கு சோப்பு, பற்பசை போன்றவற்றிற்காக தற்போது வழங்கப்பட்டு வரும் மாதாந்திர பல்வகை செலவினத் தொகையினை பள்ளி விடுதி மாணவ, மாணவியருக்கு மாதம் ஒன்றுக்கு 50 ரூபாயிலிருந்து 100 ரூபாயாகவும், கல்லூரி விடுதி மாணவ, மாணவியருக்கு 75 ரூபாயிலிருந்து 150 ரூபாயாகவும், 4 கோடியே 80 இலட்சத்து 51 ஆயிரம் ரூபாய் செலவில் உயர்த்தப்படும்.

## 16. 234 கள்ளர் பள்ளி கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கு கழிப்பறை வசதிகள் 4 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் ஏற்படுத்தப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியருக்கான கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தி தரும் பொருட்டு இப்பள்ளிகளில் உள்ள 234 கட்டடங்களில் மாற்றுத்திறனாளி மாணவ, மாணவியர் பயன்படுத்தும் வகையில் 4 கோடியே 68 இலட்சம் ரூபாய் செலவில் கழிப்பறை வசதிகள் ஏற்படுத்தப்படும்.



## 17. கள்ளர் பள்ளி கட்டடங்களில் 6 கோடி ரூபாய் செலவில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

கள்ளர் பள்ளியில் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதியும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி மாணவ, மாணவியரின் கற்றல், கற்பித்தல் சிறப்பாக அமைந்திட ஏதுவாக கள்ளர் பள்ளி கட்டடங்களில் பழுது மற்றும் பராமரிப்பு பணிகள் 6 கோடி ரூபாய் செலவில் மேற்கொள்ளப்படும்.

## 18. 15 கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 9 ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.

15 கள்ளர் பள்ளிகளில் ஆங்கில வழி கல்வி தற்போது 8 ஆம் வகுப்பு வரை நடைபெற்று வருகின்றது. இப்பள்ளிகளில் பயின்று வரும் மாணவ, மாணவியர் தொடர்ந்து இப்பள்ளிகளிலே பயில்வதற்கு ஏதுவாக, இந்த 15 கள்ளர் உயர்நிலை/மேல்நிலை பள்ளிகளில் 9ஆம் வகுப்பில் ஆங்கில வழிக்கல்வி வகுப்புகள் தொடங்கப்படும்.



## 19. அனைத்து கள்ளர் தொடக்கப்பள்ளிகளில் முதலாம் வகுப்பில் ஆங்கில வழியிலான வகுப்புகள் தொடங்கப்படும்.

கள்ளர் பள்ளிகளில் மாணவ, மாணவியர் சேர்க்கையை அதிகப்படுத்தும் பொருட்டு, அனைத்து கள்ளர் தொடக்கப்பள்ளிகளில் ஆங்கில வழியிலான வகுப்புகள் முதலாம் வகுப்பில் தொடங்கப்படும்.

**20. கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்திற்கான வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

கிராமப்புறத்தைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவியர் அதிக எண்ணிக்கையில் பயனடையும் வகையில், கிராமப்புற மாணவியருக்கு கல்வி ஊக்கத்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் பயன்பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்சவரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.



**21. நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்**

அமைப்பு சாரா தொழிலாளர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு திருமண உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டதை போன்று தமிழ்நாடு நரிக்குறவர் மற்றும் சீர்மரபினர் நல வாரியங்களில் பதிவு பெற்ற உறுப்பினர் அல்லது குடும்பத்தினருக்கு வழங்கப்படும் திருமண உதவித் தொகை ஆண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 3,000 ரூபாயாகவும், பெண்களுக்கு 2,000 ரூபாயிலிருந்து 5,000 ரூபாயாகவும் உயர்த்தப்படும்.

**22. இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களுக்கான வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.**

பொருளாதாரத்தில் பின்தங்கிய பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்தவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில், இலவச மின்மோட்டாருடன் கூடிய தையல் இயந்திரம், இலவச பித்தளை தேய்ப்புப் பெட்டி மற்றும் இலவச வீட்டுமனை வழங்கும் திட்டங்களின் கீழ் பயன்பெற நிர்ணயிக்கப்பட்டுள்ள பயனாளிகளின் ஆண்டு வருமான வரம்பு 72 ஆயிரம் ரூபாயிலிருந்து 1 இலட்சம் ரூபாயாக உயர்த்தப்படும்.



**23. இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.**

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் வகுப்பைச் சார்ந்த பொருளாதாரத்தில் பின்தங்கிய சலவைத் தொழில் செய்பவர்கள் அதிக எண்ணிக்கையில் பயன்பெறும் வகையில் ஆண்டுதோறும் வழங்கப்படும் இலவச பித்தளை தேய்ப்பு பெட்டிகளின் எண்ணிக்கையினை 2,000 லிருந்து 3,000 ஆக உயர்த்தி 48 இலட்சத்து 71 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.

**24. கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ / மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக் கழகம் மூலம் அளிக்கப்படும்.**

கள்ளர் பள்ளிகளில் பயிலும் மாணவ, மாணவியர் தங்களது ஆங்கிலப் பேச்சாற்றலை மேம்படுத்தவும் மற்றும் தனித்திறனை வளர்க்கவும் ஏதுவாக, கள்ளர் சீரமைப்பு பள்ளிகளில் 8 ஆம் வகுப்பு முதல் 11 ஆம் வகுப்பு வரை பயிலும் மாணவ, மாணவியருக்கு ஆங்கில பேச்சாற்றல் மற்றும் தனித்திறன் வளர்க்கும் பயிற்சி தமிழ்நாடு திறன் வளர்ச்சி மேம்பாட்டுக்கழகம் மூலம் அளிக்கப்படும்.



**25. 2 பள்ளி விடுதிகள் 17 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும்.**

கல்லூரி விடுதிகளின் தேவையை கருத்தில் கொண்டு, 2 பிற்படுத்தப்பட்டோர் /சீர்மரபினர் பள்ளி விடுதிகள் கல்லூரி விடுதிகளாக 17 இலட்சத்து 99 ஆயிரம் ரூபாய் செலவில் நிலை உயர்த்தப்படும்.

## 26. 2 விடுதிகளுக்கு 6 கோடியே 60 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் நலன் கருதி மாநில அரசு திட்டத்தின் கீழ் இரண்டு பிற்படுத்தப்பட்டோர்/சீர்மரபினர் விடுதிகளுக்கு 6 கோடியே 60 இலட்சத்து 54 ஆயிரம் ரூபாய் செலவில் சொந்த கட்டடம் கட்டப்படும்.



## 27. மாநில அளவில் மையப்படுத்தப்பட்ட முறையில் விடுதிகளுக்கான மளிகைப் பொருட்கள் தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி கொள்முதல் செய்யப்படும்.

பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல விடுதிகளின் நிர்வாகத்தினை மேம்படுத்தும் வகையிலும் மாணவ, மாணவியருக்கு தரமான உணவினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டும், விடுதிகளுக்கு ஒரே மாதிரியான தரமான மளிகைப் பொருட்கள் வழங்கப்படுவதை உறுதி செய்திட மளிகை பொருட்கள் கொள்முதலை மாநில அளவில் மையப்படுத்தி தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டத்தின்படி மேற்கொள்ளப்படும்.

## 28. சிறப்பாக செயல்படும் மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு 50 ஆயிரம் ரூபாய் செலவில் விருதுகள் வழங்கப்படும்.

மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலகங்களில் உள்ள அலுவலர்களின் செயல்பாடுகளை அங்கீகரிக்கும் வகையிலும், மாவட்ட அளவிலான அலுவலர்களை ஊக்குவிக்கும் பொருட்டும் சிறப்பாக செயல்படும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர்களுக்கு விருதுகள் 50 ஆயிரம் ரூபாய் செலவில் வழங்கப்படும்.



## 29. விடுதி மாணவ, மாணவியருக்கு கட்டுரைப் போட்டி, விளையாட்டுப் போட்டி போன்ற போட்டிகள் "கலைத் திருவிழா" என்ற பெயரில் 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

விடுதியில் தங்கிப் பயிலும் மாணவ, மாணவியரின் படைப்பாற்றல் மற்றும் தனித்திறனை ஊக்குவிக்கும் வகையில் விடுதி மாணவ, மாணவியருக்கு பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ("கலைத் திருவிழா" என்ற பெயரில்) 3 இலட்சத்து 80 ஆயிரம் ரூபாய் செலவில் நடத்தப்படும்.

## 30. இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து ஒரு புத்தகம் வெளியிடப்படும்.

தமிழ்நாட்டில் நடைமுறையில் இருந்து வரும் இடஒதுக்கீட்டு கொள்கை பற்றியும், சமூக நீதி செயல்பாடுகள் பற்றியும், வருங்கால சந்ததியினர் அறிந்து கொள்ளும் வகையில் இட ஒதுக்கீடு மற்றும் சமூக நீதி குறித்து பல்வேறு தகவல்கள் கொண்ட புத்தகம் 5 இலட்சம் ரூபாய் செலவில் வெளியிடப்படும்.

**எஸ்.எஸ். சிவசங்கர்**

**பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர்**